**பஸ்பாகே கோரலை பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்பாகே கோரலை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பஸ்பாகே கோரலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 186,249 ஆன 05 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 333,752 ஆன 04 பொறுப்பு விடயங்கள் என்பவற்றிற்குரிய கோவைகள் மற்றும் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது. | முன்னைய ஆண்டுகளின் கணக்கேடுகள் மற்றும் கோவைகளை கண்டுபிடிப்பதற்கு முடியாமல் உள்ளதாக. | ஒவ்வொரு கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய பதிவேடுகள் கோவைகள் மற்றும் அட்டவணைகள் பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 03 வாகனங்களின் மைலோ மானி செயற்படாதிருந்தமை காரணமாக 2020 முதல் 2024 ஆம் வரை யான காலப்பகுதிக்குரிய ஓடப்பட்ட 15,830 கிலோமீட்டர் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,773,344 ஆன 7,890 லீட்டர் எரிபொருள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மேன்மையாக செய்ய முடியாதது. | மைலோ மானியை திருத்தம் செய்வதற்காக கராஜிற்காக அனுப்பி வைத்துள்ளதாக. | மைலோ மானி செயற்படாத வாகனத்திற்கு பொறுப்பான நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டாரா என்பது தொடர்பாக மற்றும் அது நீண்ட காலமாக இருந்து திருத்தம் செய்யாமைக்கான |

| | | | |
|---|---|---|---|
| | | | காரணம் தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மேலும் மைலோமானியை சரிசெய்து வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | விதி 59 | மீளாய்வாண்டிற்காக கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்வதாக. | வருடாந்தம கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2022 முதல் 2024 வரையான காலப் பகுதிக்கரிய காலாவதியான ரூபா 2,468,648 ஆன 66 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | **1988 மே 17 ஆந் திகதிய 1988/ 22ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை** | வீதவரியை அறவிடு வதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் அனைத்து அசையாத ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் | ஆளுனரிள் அங்கீகாரம் தாமதம் காரணமாக வீதவரி மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியவில்லை என்பதாக. | 05 ஆண்டு களுக்கு ஒரு முறையை வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு வீத வரி அறவேடப்பட வேண்டும். |

ஆண்டின் பின்னர் புதிய மதிப்பீடொன்று மேற்கொண்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,578,983 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,356,264 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 853,000 | 781,973 | 722,756 | 648,326 | 6,610,000 | 760,654 | 1,080,120 | 589,109 |
| (ii) | வாடகை | 3,979,100 | 1,262,647 | 1,185,451 | 488,153 | 3,313,475 | 680,565 | 683,391 | 410,957 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,074,500 | 1,146,570 | 1,139,570 | 695,300 | 1,082,000 | 777,850 | 768,350 | 688,300 |
| (iv) | ஏனைய வருமானம் | 43,276,000 | 41,537,228 | 40,523,960 | 39,283,738 | 39,773,000 | 41,461,532 | 35,001,661 | 38,270,470 |
| | | 49,182,600 | 44,728,418 | 43,571,737 | 41,115,517 | 50,778,475 | 43,680,601 | 37,533,522 | 39,958,836 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 611,661 ஆன வீதவரி நிலுவையொன்று இருந்ததுடன் அதில்˙ ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 18 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 125,032 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 3,081,553 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 15,989, 400தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| **அறிவித்தல் பதாதைக் கட்டணங்கள்**<br><br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 468,454 ஆன வீதவரி நிலுவையொன்று இருந்ததுடன இந்நிலுவையில் 28 நிறவனங்களிடமிருந்து 01 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை ரூபா 343,654 ஆக இருந்தது. | நிலுவையைச் செலுத்தாத அறிவித்தல் பதாதைகளை அகற்றி ஏலவிற்பனை செயயவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 முதல் 2024 வரையான காலப் பகுதியில் 298 கட்டிட திட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 267 விண்ணப்பங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அதில் 183 அனுமதி பத்திரங்களுக்கு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை அவ்வாறு இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாத அபிவிருத்தி பத்திரங்களுக்காக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு விண்ணப்பதாரிக்கு 06 ஆண்டுகாலம் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. | பின் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பொருத்தமான பிரகாரம் இணக்க சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் பேரில் பலங்கொட வடக்கு சம சமூக மண்டபம் வீதி அபிவிருத்தி அதிகார சபை க்குரிய காணி ஒன்றில் தீர்மானத்திற்காக ஒப்பந்தக்கார தரப்பினருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது எனினும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் இன்றி நிர்மானிக்கப்பட்ட காரணத்தினால் பணக கொடுப்பனவினை பிரதேச செயலகம் நிராகரித்திருந்தது அதன் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்திய தரப்பினர் பொறுப்பிற்கு கடப்பாடாக இருக்க வேண்டிய போதிலும் ஒப்பந்ததார தரப்பினரின் பட்டியல் பெறுமதியான ரூபா 1,470,000 தொகையை 10 ஆண்டுகள் கடந்திருந்த போதும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணத்தை கடன் கொடுத்தோராக இறுதிக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள தாக. | உடன்படிக்கை பிரகாரம் பட்டியலை தேர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான அங்கீகாரம் இன்றி செயற்பட்டமை தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 31,320,328 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 5 இற்கும் டைப்பட்டிருந்த கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 5,903,188 தொகை மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 2இ770இ390 6,631,392 தொகை ஆக இருந்தது. | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 40 அபிவிருத்தி செயற்திட்டங்களின் கடன்கொடுத்தோர் மீதிகளின் மொத்தம் ரூபா 24,712,961 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 2,225,704 ஆக இருந்தது. | பணத்தை இதுவரை மீள் நிரப்பவில்லை என்பதாக. | கடன் கொடுத்தோர் நீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2,715 நீர் பாவனையாளர்களுடன் கூடிய 19 நீர் செயற்திட்டங்களில் நீரின், நீர் மாதிரி பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் தரம் பரீட்சிக்கப்படாமல் குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | 03 மூலாதாரங்களில் நீர் மாதிரி பரீட்சிக்சுப்பட்டு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எஞ்சியவற்றை எதிர்காலத்தில் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | குடிப்பதற்கு பொருத்தமான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 133 ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |